**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 457/2013 P.W.7/L.W.11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. ஜெஸி (உதவி ஆய்வாளர் ஓய்வு) | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.08.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 3, 4, 5 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். 28.09.2012 ம் தேதி 16.00 மணிக்கு நான் அனைத்து மகளிர் காவல்நிலையம் குளச்சலில் இருந்தபோது நிலையத்திலிருந்த தபால்களை பார்வையிட்டபோது இரணியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற Crl.M.P. 8621/2012 ன் உத்தரவு படி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களின் உத்தரவு படியும் குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலைய குற்ற எண் 25/2012 சட்டப்பிரிவுகள்498 -A, 406 இ.த.ச மற்றும் பிரிவு 3, 4, 6 வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** :

என்னை அன்றையதினமே ஆய்வாளர் நிலையைத்தில் வைத்து விசாரித்தார். 28.09.2012 அன்று தான் முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்யப்பட்டது என்றால் சரிதான். 28.09.2012 ம் தேதி நான் மனுதாரரிடம் ஏதேனும் மனு பெற்றேனா என்றால் ஞாபகமில்லை. மேற்படி முதல் தகவல் அறிக்கையானது 01.10.2012 அன்று தான் நீதிமன்றத்தில் பெறப்பட்டது என்றால் சரிதான்.

2. என்னை ஆய்வாளர் விசாரிக்கும் போது முதல் தகவல் அறிக்கை அன்றையதினமே நீதிமன்றத்திற்கு அனுப்பியதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் சொன்ன நாளில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்யவில்லை

என்றாலும், சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கையானது நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.